அறிமுகம்:

# பிரசங்கியார்களுக்கு ஓர் அறைகூவல்

## (தீத்து 1:5)

*பவுல் தீத்துவுக்கு, "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்கு கட்டளையிட்டபடியே பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னை கிரேத்தாத் தீவில் விட்டுவந்தேன்" என்று எழுதினார் (தீத்து 1:5). இந்தக் கட்டளையைத் தொடர்ந்து, மூப்பர்களுக்கான தகுதியாம்சங்களை பவுல் முன்வைக்கிறார் (வசனங்கள் 6-8). வசனம் 5ல் நாம் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை ஆய்வு செய்வதன் மூலம், (1) ஒவ்வொரு பிராந்திய சபையிலும் தேவன் மூப்பர்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் (2) உள்ளூர் சபைகளில் இப்படித் தகுதிபெற்ற மூப்பர்களை கொண்டிருக்க பிரசங்கியார்கள் உற்சாகமாய் இயங்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம்.*

*பிரசங்கியார்கள் மனுஷர்களைத் தேர்ந்தெடுத்து உள்ளூர் சபைகளில் நியமிக்க வேண்டியது பிரங்கியார்களின் கடமை என்பதல்ல இதன் பொருள். அது உள்ளூர் சபையாரின் பொறுப்பு (காண்க நடபடிகள் 6:1-6). குறிப்பாக, "பட்டணங்கள் தோறும் தீத்து மூப்பர்களை ஏற்படுத்தும்படி" சொல்லப்பட்டான். இந்த "ஏற்படுத்து" எனும் பதம் கிரேக்க மொழியில் ஒரு தொகுப்பு வார்த்தையான, kathistemi என்பதாகும். Histemi எனும் வினைச்சொல்லின் பொருள் "நிற்கச் செய்." KJV யில் "பட்டணங்கள் தோறும் மூப்பர்களை புனித பணிக்கென நியமித்து அமர்த்து," என்று சொல்லப்படுகிறது, இது பவுல் தனது மனதில் கொண்டிருந்த எண்ணமான சமய சடங்குடன் கூடிய பிரசங்க ஆராதனையை குறிப்பிடுகிறது. W. E. வைன் குறிப்பிடுகையில், "வெறும் சடங்காச்சார பிரசங்க ஆராதனையுடன் அமரப் பண்ணுவதல்ல, ஆனால் 'ஏற்படுத்துதல்,' சபைகளின் ஏற்புடமைக்கு ஏற்ப, ஏற்கனவே பரிசுத்த ஆவியில் நியமனம் பெற்று தகுதியாக்கப் பட்டவர்கள், தங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் சாட்சியமாய் வாழ்ந்தவர்கள் நியமிக்கப்படுவதாகும்."[1] தீத்து 1:5ல் AB வேதாகமத்தில் "மூப்பர்களை நியமித்து சபையிலே அவர்களை ஏற்படுத்து என்று சொல்லப்படுகிறது" (வலியுறுத்தல் என்னுடையது).*

### பொதுவான ஆலோசனைகள்

*பின்னதாக இந்தப் பாடத்தில், மூப்பர்களை நியமிப்பதில் பிரசங்கியார்களின் கடமை குறித்து இன்னும் அதிகமாய்ச் சொல்லப்படும். முதலாவதாக, ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இல்லாமலிருந்தாலோ அல்லது இருக்கிறவர்களோடு மேலும் சேர்க்க வேண்டியிருந்தாலோ "குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கு" பிரசங்கியார் உதவுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை*

ஆராய்வோமாக.

*1. இந்த செயல்முறையை அவசரப்படுத்தவேண்டாம். இதற்கு கொஞ்சம் சமயம் தேவைப்படுகிறது.* 1 தீமோத்தேயு 5:22ல், குறிப்பிட்டச் சூழ்நிலைகளில் மூப்பர்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று பவுல் குறிப்பிட்டு (வசனங்கள் 19-21), தொடர்ந்து அவர், "ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே ..." (வசனம் 22) என்றார். "கைகளை வைக்குதல்" என்பது நியமன ஆராதனையை அநேகமாகக் குறிப்பிடலாம். இதன் விளைவாக பவுல், "மனுஷர்களை மூப்பர்களாக நியமிப்பதில் அவசரப்படாதே, அப்படிச் செய்யாமல் போனால் தகுதியற்றவர்களை மூப்பர்களாக்கி முந்திய நிலைமையிலும் மோசமான நிலையை அடைவதாகும்" என்று கூறினார்.

*2. மனுஷர்களுக்கு வகுப்பு நடத்தி அவர்கள் வளரவும் பூரணப்படவும் உதவுங்கள்.* ஒரு நல்ல கணவனாக, தகப்பனாக நடக்க வகுப்பு நடத்துவது (ஒரு மூப்பருக்கு தகுதியாக்கும் திறவுகோல் தேவை இது) பயனளிக்கும் மற்றும் பொதுப்படையாக எப்படி தலைமைத்துவத்தைக் கையாள்வது என்கிற பயிற்சி வகுப்பும் அவசியம்.

*3. ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இல்லாதிருந்து ஆண் அங்கத்தினர்கள் பொருளாதாரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தால், இந்தக் கூட்டங்களை பயன்படுத்தி மூப்பர்களாவதற்கு ஏதுவான மனமுடையோர்களை ஆயத்தப்படுத்த வேண்டும்,* அப்படி ஒழுங்கு படுத்துவது முறையான தெரிவுக்கும் சுயநலமின்மைக்கும் வழி வகுக்கும். இது மிகவும் கவனமாக *சாமர்த்தியமாக* செயல்படுத்தப் படவேண்டும்.

*4. குறிப்பிடத்தக்க மனுஷர்களை ஊக்கப்படுத்துங்கள், அவர்களிடம் தனிக்கவனம் செலுத்துங்கள்.* திறமையுள்ள தலைவர்களை உங்கள் வீடு மற்றும் மருத்துவமனை சந்திப்புகளிலும், வீடுகளில் நடத்தும் வேதாகம வகுப்புகளிலும் உங்களுடன் கலந்து கொள்ளச் செய்யுங்கள்.

*5. இந்த செயலாக்கத்திற்கு ஜெபம், மிக அதிகமான ஜெபம் தேவை.* இது குறித்து "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:17), உள்ளூர் சபையையும் ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்துங்கள். இந்தக் காரியங்கள் மிகவும் முக்கியமானதால், சிறப்பு ஜெபக் கூட்டங்களை உள்ளூர் சபை முறையாக நடப்பிக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் *சரியானதாகவும்* நல்ல விளைவையும் கொண்டிருப்பது போல் உலகத்தின் பிறபகுதிகளில் சரியாகவும் சரியான விளைவுள்ளதாகவும் இல்லாமல் போகலாம். அதே போல, உலகத்தின் வித்தியாசப்பட்ட பகுதிகளில் இருக்கும் பிரசங்கியார்கள் இவ்விஷயத்தில் தலைமைத்துவத்துக்கு எவ்வகையில் உதவமுடியும் என்று மற்றவர்களிடத்திலும் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டேன், ஜே.சி. சோட், ஆலன் டைல்ஸ், கோர்டன் ஹூகன், ஜே. எல். மே மற்றும் டிம் வெஸ்ட்புருக் ஆகியோருக்கு நன்றி, இவர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் நேரம் எடுத்துக் கொண்டனர். இதழின் நிறைவில் அவர்களின் துணைக் கட்டுரைகளைக் காண்பீர்கள்.

## “வசனத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள்”

இந்த படிப்பில் என்னுடைய பிரதான குறிக்கோள் ஒரு உள்ளூர் சபையில் தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதில் உதவ ஒரு பிரசங்கியார் என்ன *பிரசங்கிக்கக்* கூடும் என்பதுதான். ஆக, ஒரு பிரசங்கியாரின் முக்கியமான பொறுப்பு என்ன? “வசனத்தைப் பிரசங்கம் பண்ணுவதல்லவா” (2 தீமோத்தேயு 4:2)? இந்தப் பிரசங்கங்கள் தேவ - அங்கீகாரம் பெற்ற தலைமைத்துவம் எவைகளையெல்லாம் உள்ளடக்கியது என்பதைப்பற்றி உள்ளூர் சபையின் விழிப்புணர்வை அதிகரிக்கக்கூடும். அவைகள் தனிப்பட்டவைகளாகவும் அல்லது ஒரு தொடர் பிரசங்கமாகவும் வித்தியாசப்பட்ட சூழல்களில் பயன்படுத்தப்படக் கூடும்.

## தேர்ந்தெடுக்கும் நடைமுறைகள்

நடபடிகள் 6ல் உள்ளூர் சபைக்கு அப்போஸ்தலர்கள் சொன்னார்கள், “ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற எழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக [பந்தி விசாரணைக்காக] ஏற்படுத்துவோம்” (வசனம் 3). “இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது ... அவர்கள் ஸ்தேவானையும்” வேறு ஆறுபேரையும் தேர்ந்தெடுத்தார்கள் (வசனம் 5). எருசலேமில் இருந்த சபையார் என்ன நடைமுறையில் தேர்ந்தெடுத்தார்கள், என்று நமக்குச் சொல்லப்படவில்லை. அந்தந்த உள்ளூர் சபையின் தனிப்பட்ட தீர்மானத்துக்கு இந்த நடைமுறையை செயல்படுத்த தேவன் விட்டு விட்டதுபோல் தெரிகிறது. எனவே, நீங்கள் பின்பற்றும்படி, நான் எந்த நடைமுறையையும் கொடுக்க முடியாது. நான் செய்வதெல்லாம் ஒரு அடிப்படை புறக்குறிப்பாக நான் ஊழியம் செய்த உள்ளூர் சபைகளில் பயன்படுத்தப்பட்ட நடைமுறையைக் கொடுக்கக் கூடும்.

தேர்ந்தெடுப்பு துவங்குவதற்குமுன், இந்த நடைமுறைக்கு யார் பொறுப்பேற்று நடத்துவது எனத்தீர்மானிக்க வேண்டும். ஒரு உள்ளூர் சபையில் ஏற்கனவே மூப்பர்கள் இருப்பார்களானால், அவர்களே இதைச் செய்ய திறமைபெற்றவர்கள். ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இல்லாத பட்சத்தில், சபைக்கடுத்த காரியங்களை நடப்பிக்கும் மனிதர்கள் (ஆண்கள்) இதற்காக விசேஷித்த கமிட்டி அமைத்து அநேக நபர்களை ஊழியத்திற்குட்படுத்தலாம்.

மூப்பர்களாகும் தகுதிபெற்ற ஆண்களின் பெயர்களை எழுதிக் கொடுக்கும்படி இரண்டு வார அவகாசத்தில் அங்கத்தினர்களுக்கு அறிவிக்க வேண்டும். அவர்களுடைய பெயர்களை எழுதிக் கொடுப்பதற்கு முன் அங்கத்தினர்கள் குறிப்பிடும் நபர்களிடத்தில் பேசும்படி நீங்கள் ஆலோசனை கொடுக்கலாம். அந்த பெயர் பட்டியலை (ஏற்கனவே உள்ள மூப்பர்களிடத்திலோ அல்லது ஏற்படுத்தப்பட்ட கமிட்டியினிடத்திலோ) யாரிடத்தில் கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்.

இரண்டு வாரக் கணக்கு முடிந்தபின், பொறுப்பேற்று நடத்துபவர்கள் கொடுக்கப்பட்ட பெயர்களைத் தொகுத்து ஒவ்வொரு பெயரும் எத்தனை முறை வந்துள்ளது என குறிப்பு எடுக்க வேண்டும். பிறகு இந்த குழுவுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் போதிய அங்கத்தினர்களால்

தேர்ந்தெடுத்துள்ளதைக் கொண்டு நியமிக்கவோ நியமிக்காமல் விட்டு விடவோ செயலாக்கும் பணி உள்ளது. (இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஒரு குறிப்பிட்ட நபர் மேய்ப்பனாக இருக்கும்படி போதுமான ஆடுகளால் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறாரா? அந்த மந்தைக்கு அவர் தலைவராகலாமா?) என்னுடைய அனுபவத்தில், பெயர்பட்டியல் சரிபார்க்கப்பட்ட பின் வழக்கமாக அநேகரால் குறிப்பிடப்பட்ட பெயர்களுக்கும் சில அங்கத்தினர்களால் மட்டுமே குறிப்பிடப்பட்ட பெயர்களுக்கும் தெளிவான வித்தியாசம் காணப்படும். அதன் பிறகு நியமன நடைமுறைபடுத்தும் குழு, பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெயர்களில் முதலிடம் பெற்றவர் தொடங்கி, ஒவ்வொருவரிடம் தனியாகப் பேச வேண்டும். அவர்களிடம் என்ன பேச வேண்டும் என்பதை முன் கூட்டியே விவாதித்து வைத்துக் கொள்ளவேண்டும். பேச வேண்டிய கருத்துக்களில் மூப்பருக்கான பொதுவான தகுதியாம்சம், குறிப்பிட்ட அந்த மனிதன் அப்படி ஊழியம் செய்ய விரும்புகிறாரா இல் லையா, அவரது குடும்பத்தார் அவர் மூப்பராக பணியாற்றுவது குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதெல்லாம் இருக்க வேண்டும். ஏற்கனவே ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இருப்பார்களானால், பெயர் பட்டியலில் இடம் பெற்ற இந்த (புதிய) நபர் அவர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக, மேலும் இரண்டு வார அவகாசம் கொடுத்து தகவல்களைச் சேகரிக்கவும் பேட்டிகாணும் செயலை முறைப்படுத்தவும் வேண்டும்.

அந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை, தகுதியான மூப்பர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும், மற்றும் சபை அங்கத்தினர்கள் குறிப்பிட்ட கால வரைக்குள் (அநேகமாக ஒரு வாரமோ இரண்டு வாரமோ கொடுக்கப்பட்டு அதற்குள்) அறிவிக்கப்பட்ட நபர்களில் யாராவது வசன ரீதியாக மூப்பராவதற்குத் தகுதியற்று இருப்பின் ஆட்சேபனை தெரிவித்து கடிதம் கொடுக்க வேண்டுமென்று அறிவிக்க வேண்டும். ஒரு விதிமுறையாக, இந்த ஆட்சேபங்கள் *வசனரீதியானதாக* இருக்க வேண்டும், அவைகள் *எழுதி* கொடுக்கப்பட வேண்டும், மற்றும் *எழுதப்பட்ட* ஆட்சேபனைகளில் எழுதியவரின் கையொப்பம் இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டும்.

எப்படிப்பட்ட ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அதை குறித்து நடவடிக்கை எடுக்க நேர அவகாசம் ஒதுக்கப்பட வேண்டும். இதனால் பெயர் எழுதப்பட்ட நபர்களையோ அல்லது ஆட்சேபித்தவர்களையோ சந்திக்க வேண்டியதாயிருக்கும் (ஆட்சேபித்தவர் எப்படி அந்தத் தகவலைப் பெற்றுக் கொண்டார், தெரிவிக்கப்பட்ட ஆட்சேபம் தனிப்பட்ட உணர்வா அல்லது வசன ரீதியிலானதா என்று அறிய இது தேவை). ஆட்சேபித்தவர்களை ஒரு மூப்பராகப் போகிறவருடன் சந்திக்க வைக்க வேண்டியதாகக் கூட இருக்கலாம். மறுபடியும், இந்தப் படிகள் அதிகமான ஜெபத்தோடு அதை நடைமுறைப் படுத்துவோரால் எடுக்கப்பட வேண்டும். எந்த ஆட்சேபனையும் திருப்திகரமாக கையாளப்பட்டவுடன், இதுபோன்ற அறிவிப்புகள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையன்றுஅறிவிக்கப்பட வேண்டும்: "அறிவிக்கப்படும் இந்த நபர்களெல்லாம் மூப்பர்களாக நியமிக்கப்படுகிறார்கள்." (பிறகு அந்த மனிதர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும்.)

நடைமுறைப்படுத்தத் துவங்கும்போதே, ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை, மூப்பர்கள் (அல்லது கூடுதல் மூப்பர்கள்) நியமிக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது என்று, அங்கத்தினர்களுக்குச் சொல்ல வேண்டும். அறிவிக்கப்படும் தோராயமான தேதி மேலே குறிப்பிட்ட அனைத்து படிகளும் இடம் பெற ஏதுவான கால அவகாசம் கொடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். எல்லாமே மிகவும் சரியாகவோ அல்லது ஓரளவு சரியாக நடப்பதாக யூகித்து, நியமன ஆராதனை குறிக்கப்பட்ட ஞாயிற்றுக் கிழமை இடம் பெறச் செய்ய வேண்டும்.

இந்த நடைமுறையை செயல்படுத்தும் போது, என்னுடைய கருத்துக்களை மூப்பர்களைப் பற்றி மட்டும் ஓரளவுக்கு குறிப்பிட்டிருக்கிறேன், ஆனால் அதே நடைமுறைதான் மூப்பர்கள் நியமனத்துக்கும், மூப்பர் மற்றும் உதவிக்காரர்களை ஒரே நேரத்தில் நியமிக்கிறபோதும் பின்பற்றப்பட வேண்டும். ஒரு இடத்தில் சரியாக நடைபெறுவது போல வேறு இடங்களில் நடக்காமல் போகலாம். மேலும், ஒரு பெரிய உள்ளூர் சபையில் நியமன காலம் அதிகமாக எடுத்துக் கொள்ளப்படுவது போல ஒரு சிறிய உள்ளூர் சபையில் அதிக காலம் எடுத்துக் கொள்ளப்படாமல் நடைபெறலாம். அது ஒரு உள்ளூர் சபையின் தலைமைத்துவப் பொறுப்பில் உள்ளவர்களைப் (மூப்பர்கள் ஏற்கனவே இருந்தாலோ அல்லது பொருளாதாரக் கூட்டம் நடத்தும் முன்னோடிகளோ அவர்களைப்) பொறுத்து நடைமுறைப் படுத்துவதும் ஒதுக்கப்படும் காலங்களும் முடிவு செய்யப்படும்.

## "மூப்பர்களை ஏற்படுத்து"

இது நியமன ஆராதனைக்கு நம்மைக் கொண்டு வருகிறது. பவுல் தீத்துவிடம், "பட்டணங்கள் தோறும் மூப்பர்களை ஏற்படுத்து" என்று சொன்னார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, "ஏற்படுத்து" என்பது கிரேக்க வார்த்தையில் "தெரிந்தெடு" என்ற பொருளையுடையதல்ல. "ஒழுங்குபடுத்துவதில்" மூப்பர்கள் (நியமனத்தில்) தீத்துவுக்கும் கொஞ்சம் பங்கு இருக்க வேண்டும் என்பதை அது சுட்டிக் காட்டுகிறது.

சபையின் தலைமைப் பொறுப்பேற்பவர்களை நியமிப்பது குறித்து பேசுகிற மேலும் சில கூடுதல் வசனப் பகுதிகள் புதிய ஏற்பாட்டில் உண்டு. நடபடிகள் 6ம் அதிகாரத்தில் எருசலேமிலிருந்த உள்ளூர் சபைக்கு அப்போஸ்தலர்கள், "ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை *இந்த வேலைக்காக* [பந்தி விசாரணைக்காக] ஏற்படுத்துவோம்" (வசனம் 3) என்று சொன்னார்கள். "இந்த வேலைக்காக *ஏற்படுத்துவோம்*" என்பது தீத்து 1:5ல் குறிப்பிடப்படுகிற "ஏற்படுத்துதல்" என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. நடபடிகள் 6:6ல் அப்போஸ்தலர்கள் எப்படி "ஒழுங்குபடுத்தி" "ஏற்படுத்தினார்கள்" என்பது குறிப்பிடப்படுகிறது. உள்ளூர் சபையார் தேர்ந்தெடுத்த ஆண் அங்கத்தினர்களை அப்போஸ்தலர் முன்பாக நிறுத்தினார்கள், அப்போஸ்தலர்கள் ஜெபித்து அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். நடபடிகள் 14ல் பவுலும் அவரது உடன் ஊழியர்களும் ஏற்கனவே ஸ்தாபிதம் செய்திருந்த உள்ளூர் சபைகளை மறுபடியும் சந்திக்கச் சென்ற போது:

> அவர்கள் சீஷருடைய மனதைத் திடப்படுத்தி விசுவாசத்திலே

> நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்." அல்லாமலும் அந்தந்த சபைகளில் அவர்களுக்கு *மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து,* உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (வசனங்கள் 22, 23; வலியுறுத்தல் என்னுடையது).

இந்த வசனப்பகுதியில் "ஏற்படுத்தி வைத்தல்" எனும் பதம் வித்தியாசப்பட்ட வார்த்தையிலிருந்து வந்தது, உண்மையான நேரடிப்பொருள் "கைகளை வெளியே நீட்டுதல்."[2] இது ஆண்களை தெரிந்தெடுப்பதைக் குறிக்கும். அது உண்மையானால், "*அவர்களோடு* மூப்பர்களை ஏற்படுத்தினார்கள்" என்று மொழிபெயர்ப்பு செய்வது சிறந்தது. எப்படியிருப்பினும், இந்தப்பதம் தேர்ந்தெடுக்கும் நடைமுறையைக் குறிப்பிடாமல் மாறாக நியமனம் செய்தலை (ஏற்படுத்துவதை) குறிப்பிடுகிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, மூப்பர்களை நியமிப்பதை அநேகமாக மனதில் கொண்டு தான் "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே" என்று சொல்லியிருக்கக் கூடும் (1 தீமோத்தேயு 5:22அ) அந்தியோகியாவிலிருந்த சபை சவுலையும் பர்னபாவையும் சுவிசேஷ ஊழியத்திற்கு அனுப்பியபோது, அவர்கள் "உபவாசித்து ஜெபம் பண்ணி அவர்கள் மேல் தங்கள் கைகளை வைத்து" அனுப்பி வைத்தனர் (நடபடிகள் 13:3).

பழைய ஏற்பாட்டில், உபவாசித்தல் (உணவு உண்ணாமல் இருத்தல்) என்பது பிரதானமாக *மனதுக்கத்தில் இருக்கும்போது* செய்வது, புதிய ஏற்பாட்டில், இது *முன்னுரிமையின்மேல்* வலியுறுத்தப்படுகிறது: தேவையான நேரத்தை எடுத்துக் கொண்டு "இது சாப்பிட வேண்டிய நேரம்" என்பதை கண்டு கொள்ளாமல் விடுதல். கைகளை வைப்பதைப் பொறுத்தமட்டில், புதிய ஏற்பாட்டு நாட்களில், அநேகக் காரணங்களுக்காக மற்றவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அவை (1) அற்புத வரங்களைக் கொடுப்பதற்காக, (2) சுகப்படுத்த, மற்றும் (3) குறிப்பிட்ட பொறுப்பை ஒப்படைக்கும்போது ஒரு அடையாளமாக கைகள் வைக்கப்பட்டது. முதலாவது காரியத்தை அப்போஸ்தலர்கள் மட்டுமே செய்ய முடியும் (நடபடிகள் 8:18). அப்போஸ்தலர்களும் அவர்களுடைய கைகள் வைக்கப்பட்டவர்களும் மட்டுமே இரண்டாவதை செய்ய முடிந்தது (நடபடிகள் 6:5, 6, 8; 8:5, 6). அது மூன்றாவது பயன்பாடு, இன்றைய நாட்களில், நியமன ஆராதனைக்காக விட்டுவைக்கப்படுகிறது: இது பிறரிடம் மிகப்பெரிய பொறுப்பை ஒப்படைப்பதை அடையாளப்படுத்துவதற்காக செய்வது.[3]

நமக்குள்ள உதாரணத்திலிருந்து, நியமன ஆராதனை முழு உள்ளூர் சபையையும் உள்ளடக்கிய ஒரு பெருமைக்குரிய ஆராதனையாக இருக்க வேண்டும். இந்த ஆராதனை கீழ்வரும் ஒழுங்கின்படி நடக்க வேண்டும்:

- சீக்கிரமாய் (அவசரமாய்) செய்யக்கூடாத ஒன்று ("உபவாசித்தல்").
- புதிய தலைவர்களாய் இந்த கனமான ஊழியத்துக்குத் தோள்களில் பொறுப்பேற்றுக் கொள்வோரும், அவர்களை நியமிப்போராகிய உள்ளூர் சபையோரையும் ஆகிய இருசாராரையும் நெகிழ்வடையச் செய்கிற ஒரு ஆராதனையாக இருக்க வேண்டும் ("கைகளை வைக்குதல்").

- அதிகமான ஜெபம் தேவைப்படுகிற ஒரு ஆராதனையாக இருக்க வேண்டும்.

பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினவைகளை வைத்து பிரசங்கியாராக இருப்பவர் இந்த ஆராதனையில் முக்கியமான பகுதியை முன் வழிகாட்டி செயல்பட வேண்டும், செயல்படலாம் என்றும் நாம் முடிவெடுக்க முடியும். இந்த இதழில் மூப்பர், உதவிக்காரர் ஆகிய இருசாராரையுமே நியமிக்கிற ஒரு முன்மாதிரி ஆராதனை முறைமை விளக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு ஆராதனையை நடத்துவது எப்படி என்பது குறித்து ஒவ்வொரு பிரசங்கியாருக்கும் ஒரு சுய சிந்தனைகள் இருக்கலாம்.

நியமன ஆராதனையைக் குறித்து இன்னுமொரு கருத்தாய் ஆராய்ந்த ஒரு காரியத்தைச் சொல்ல வேண்டும். கடந்த காலங்களில், பவுல் தீத்துவுக்கு மூப்பர்களை ஏற்படுத்தும்படி சொல்லியிருப்பதால், மூப்பர்கள்மேல் பிரசங்கியார்களுக்கு அதிகாரம் உண்டு என்று சிலர் தீர்மானித்தனர். அது அப்படியல்ல. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி பதவி ஏற்கும்போது, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிதான் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். ஆகிலும் அவரது செயல் தலைமை நீதிபதி ஜனாதிபதிக்கு மேலான அதிகாரம் பெற்றவராகவிடாது. சபையில் மூப்பர்கள் நியமிக்கப்பட்ட பிறகு பிற அங்கத்தினர்களைப் போலவே உள்ளூர் சபை பிரசங்கியாரும் அவர்களுடைய கண்காணிப்புக்குக் கீழ்ப்பட்டவர்தான்.

## தொடர்ந்து ஊக்கமளியுங்கள்

ஒருமுறை மூப்பர்கள் நியமிக்கப்பட்டு விட்டால், அவர்களுடனான உங்கள் நட்புறவைக் காத்துக் கொள்ள உங்களால் இயன்றமட்டும் செயல்படுங்கள். அவர்களைத் தொடர்ந்து உற்சாகப் படுத்துங்கள், உள்ளூர் சபையாரும் தொடர்ந்து அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும்படி வற்புறுத்துங்கள்.

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 33. [2]கிரேக்க வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டது *cheirotoneo* ("கை" [*cheir*] கூட்டல் "நீட்ட" [*teino*]). (Vine, 34.) [3]நியமன ஆராதனையைக் குறித்த எனது குறிப்பில் "கைகளை வைக்குதல்" குறித்து அநேக வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளது, அவைகளில் இன்றைக்கான நியமன ஆராதனையும் உள்ளடங்கியது.